(Tamil)

15. 2864 P


1049
9/21

2864

பாரதமாதா துணை.

# பண்டித
# ஜவர்லால் நேரு
## சுயராஜ்யத் திலகம்

காப்பிரைட்.



விலை அணு 2.

M. பழனியாண்டி அன் கோ.,
புத்தக வியாபாரம், புதுமண்டபம், மதுரை

NATIONAL ARCHIVES LIBRARY
No 2864
Date 6.3.72
GOVT. OF INDIA

உ

பாரதமாதா துணை.

சுயராஜ்யபவனச்சீமான்

# பண்டிதஜவஹர்லால்

கீதமெனும்

# சுயராஜ்யத் திலகம்.



இஃது

முத்தமிழ் க்ஷேத்திரம்

**மதுரகவி. V. நடராஜ பிள்ளையவர்கள்**

இயற்றியது.


பதிப்பாளர்

**M. பழனியாண்டி அன் கோ.**

புத்தக வியாபாரம்

புதுமண்டபம், மதுரை.

மதுரை, ராஜா பிரஸிற் பதிப்பிக்கப்பெற்றது.

காப்பிரைட்] 1931. [விலை அணா 2.

ஓம்

# மதிப்புரை.

நமது தமிழ் நாடு இன்றைய நிலையில் கொண்டுள்ள விடுதலையுணர்ச்சிக்குத்தக்க ஊக்கமளிப்பது தேசபக்திததும்பும் தேசிய கீதங்களே என்பதை யாவரும் ஒப்புக்கொள்ளக் கூடியதாம். ஆகலால், இந்தியமக்களின் ஏற்றங்கருதித்தற்கால நவீனவர்ண மெட்டுக்களில் படிப்பவர், கேட்பவர்களின் மனதைக் கவர்ந்துநிற்பது நமது முத்தமிழ் க்ஷேத்திரம் மதுரகவி, V. நடராஜபிள்ளை அவர்களியற்றியுள்ள, சுதேச ரத்தினமென்னும் "தேசியகீதம்" உப்புச்சத்தியாக்கிரக கீதமென்னும் "காங்கிரஸ் பாட்டு" இந்நூலாகிய "ஜவஹரிலால் சுயராஜ்யத்திலகம்" என்பவைகளேயாகும்.

இத்தகைய சுதேச கீதப்புத்தகங்களைத் தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் ஆதரிக்கவேண்டியது அவசியமாம். அத்துடன் திரு. V. நடராஜ பிள்ளையவர்கள் இதுபோன்ற பல தேசிய நூல்களை இயற்றித் தமிழுலகிற்கு உதவுமாறு அன்னாருக்குப் பாரதமாதாவின் திருவருள் பெருகுவதாக.

இங்ஙனம்,

மதுரை, 11—9—31

மதுர பாஸ்கரதாஸ்.

உ

பாரதமாதா துணை.

சுயராஜ்ய பவனச் சீமான்

# பண்டித ஜவஹர்லால்

கீதமெனும்

# சுயராஜ்யத் திலகம்.

வெண்பா.

சீரார் ஜவஹரிலால் தீரமதைக் கீர்த்தனையாய்
பாரா ரிசைத்திடவே பாடுதற்கு—வாரார்
ஒருகைமுகன் பாதமல ருள்ளத்தில் வைத்தேன்
திருவருள்சித் திக்குமெனத் தேர்ந்து.

பாரதமாதா வணக்கம்.

மீனலோசனி தாயே-என்ற மெட்டு.

இராகம்-கல்யாணி-தாளம்-ஆதி.

பல்லவி.

ஞான பாரதத் தாயே—உனை
நம்பினேனருள் வாயே (ஞான)

அநுபல்லவி.

வானவர்புகழ்ந்திடும் மாசிலாமணியே
வருவாய் தருவாய் வரமே (ஞான)
தீனரைக்காத்தருள் தேவகற்பகமே
திருவே யுருவே கருவே (ஞான)
பூரணசுதந்திரம் பொருந்திடப்பலமே
புரிவாய் தெரிவாய் நலமே (ஞான)
தேமிகும்நடராஜன் செந்தமிழ்ப்பொருளே
திகழ்வாய் மகிழ்வாய் நிதமே (ஞான)

# சுயராஜ்ய பவனச்சீமான்

## பராக்ரமப் புகழ்ச்சி.

இந்தியா சட்டசபை—என்ற மெட்டு.

இராகம்—மோகனகல்யாணி—தாளம்—ஆதி.

கண்ணிகள்.

பண்டித ஜவஹரிலால் பாரதவீரன்
வீரன்! வீரன்!! வீரன்!!! (பண்)

எண்டிசை யோர்புகழும் இணையில்லாத்தீரன்
தீரன்! தீரன்!! தீரன்!! (பண்)

சரண எடுப்பு.

தேசாபி மானங்கொண்டு தீனர்களைக்காத்திடவே
தீவிரமாயுழைக்குந் தேசியச்சிங்கம்
சிங்கம்! சிங்கம்!! சிங்கம்!!! (பண்)

சாத்மீகப்போராட்டத்தில் சந்தோஷமாக நின்று
தவச்சாலை யாகுஞ்சிறை சார்ந்திட்ட தங்கம்
தங்கம்! தங்கம்!! தங்கம்!!! (பண்)

ஒத்துழையாமையிலே உயர்ந்தவக்கீல் வேலைதன்னை
உதறியே தள்ளிவிட்ட உத்தமசீலன்
சீலன்! சீலன்!! சீலன்!!! (பண்)

பார்புகழ் மாமதுரை பாலன் நடராஜனுரை
பண்பான கீதத்திற்குப் பாத்திரலோலன்
லோலன்! லோலன்!! லோலன்!!! (பண்)

## தேசாபிமானச்செல்வி

# ஸ்ரீமதி கமலாநேரு

## பராக்ரமப் புகழ்ச்சி.

கல்யாணக் கோலாகலமே—என்ற மெட்டு.

இராகம்—மத்தியமாவதி—தாளம்—ஆதி.

பல்லவி.

மேலான பெண்கள் நாயகம்
கமலாநேரு (மே)

அநுபல்லவி.

காலானு கூலபேதங்
கருத்தினிலே திருத்தமுட—னுணர்ந்திடும் (மே)

சரணம்.

தேசாபிமானச் சிங்கமே—ஜவஹரிலால்
சிந்தை மகிழுந் தங்கமே
ஆசாரக்கிரீட ராணி
அனைத்துயிருஞ் செழித்திடவே—பணிசெயும் (மே)
தீர்க்கமாய்க்கைது செய்யவே—சிறை செல்லுமுன்
தேன்போற்ப்ரசங்க முய்யவே
மார்க்கமுற் றுவ்வோரிந்தியர்
வசிக்குமனை மதிக்குங்காங்—கிரஸென்ற (மே)
மெம்பர்களென்று குறிப்பீர்—அடிமையென்ன
மேவும் விலங்கை முறிப்பீர்
நம்புவீ ரேல்சுயாட்சி
நலத்தினிலே களித்திடுவீர்—எனவுரை (மே)
தீரமுற்றசு தேசியே—நடராஜன்சொல்
தேசீயகீத நேசியே
வீரலட் சுமிதேவி
மிகுத்தகலை யகத்திலக—வருமதி (மே)

# வீரப்ரதாப ஜவர்லால்

## தேசத்தொண்டு.

ஞானபண்டித மோதிலால் என்ற மெட்டு.

இராகம்-இ-பியாகு-தாளம்-ஆதி.

பல்லவி.

வீரப்ரதாபன் ஜவர்லால்
வெற்றிச் சுதந்த்ர (வீர)

அநுபல்லவி.

காரண கார்ய பாகன்
கமலா நேருவின் மோகன்
பூரணராஜாங்க யோகன்—புகழ்விவேகன் (வீர)

தொகையரா.

சீர்பரவும் அலகபாத் தூற்றமீர்க் கஞ்சிற்
ஜெனித்திட்ட செல்வச் சீமான்

திகழுமிரு பன்மூன்று ப்ராயமதிற் பாரிஸ்டர்
சேவகம் புரிந்த யூகன்

பேர்பரவும் மோதிலால் குடியேற்ற ஆட்சியைப்
பேசிய போ தெதிர்த்து

பேதமிற் பூரணசு யாட்சியே வேண்டுமெனப்
பேசிய ஞான ரத்னம்

பார்பரவுங் காந்திமகான் ஒத்துழையாத் திட்டத்திற்
பண்புட னுழைத்த தீரன்

பதருப்புச் சட்டமதைத் தாக்கியே சிறைசென்ற
பாலிய வீர சிங்கம்

நேர்பாவும் அலகபாத் முனிஸிப்பல் தலைவராய்
நீதிசெலுத் திட்ட பூமான்
நிலைபெற்ற சாத்வீகக் கொள்கையைப் பின்பற்றும்
நித்தியா னந்த சீலன்

ஷை அநுபல்லவி யெடுப்பு.

ஆலவாய் க்ஷேத்ர வாசன்
அன்பன் வீ. நட ராஜன்
சீலசங்கீதப்ர காசன்—திவ்யோபன்யாசன் (வீர)

## தியாகத்தன்மை.

பங்கரி மோரி என்ற இந்துஸ்தான் மெட்டு.

இராகம்-இ-பியாகு-தாளம்-சாப்பு.

பல்லவி.

ஆனந்தபவனத் யாகன் ஜவஹர்லால்
ஆப்த மித்திரனே (ஆன)

அநுபல்லவி.

தீனரைக் காத்திடுஞ் ஜீவகாருண்யன்
தெம்புடன் தேசிய சேவை செய்புண்யன்
மாநிலம் புகழுந் தீரன்—கலைக்
யானியாஞ் சுந்தர மாரன் (ஆன)

பல்லவி எடுப்பு.

எண்டிசை யோர்புகழ் பண்டித மோதிலால்
ஈன்ற புத்திரனே (எண்)

அநுபல்லவி.

இந்தியா மந்திரி யான லார்ட் பர்க்கன்
இகழ்ந்து பேசிய தேசீயத்தர்க்கம்
வெந்து கரிந்திடச் செய்த சன்மார்க்கன்
வித்வ நடராஜன் ப்ரசங்க வாக்யன் (ஆன)

# இளவரசர் விஜயம்

## இளஞ் சிங்கத்தைக் கைது செய்தல்.

பண்டித மோதிலால்நேரைப் பறிகொடுத்தோம் என்ற மெட்டு.

இராகம். இந்துஸ்தான்-காப்பி-தாளம்-ஆதி.

பல்லவி.

பண்டித ஜவர்லால் நேரு பால்ய சிங்கமே
பால்ய சிங்கமே வீரர் பரவுந் தங்கமே (பண்)

அநுபல்லவி.

மண்டலத்து மாந்தரெல்லாம் மங்களமாய் வாழ்ந்திடவே
தொண்டு செய்தார் பாரதத்தாய் துயரம் நீங்கவே
துயரம் நீங்கவே வெற்றிச் சுதந்த்ரமோங்கவே (பண்)

தொகையரா.

பஞ்சாப்பின் படுகொலையைச் சகியாது மக்களுக்குப்
பாடு பட்டார்
குஞ்சரம்போல் இளவரசர் விஜயமதிற் கைதுசெயக்
குதூ கலித்தார்
அஞ்சாத சட்டசபை பஹிஷ்காரஞ் செய்திடவே
அரிய தந்தை
நெஞ்சாரக் கூறியதை விரும்பாமற் சாத்மீக
நீதி கொண்டார்

ஷை அநுபல்லவி எடுப்பு.

சீர்த்திதரும் கூடற்பதி சீலன்நட ராஜன் துதி
பூர்த்திபெறுங் கோமகனும் புண்ய சீலனே
புண்ய சீலனே நேரு கண்ய பாலனே (பண்)

# தேசாபிமானச் சீமான்

## ஜெனனமும் தியாகமும்.

நானுன்னை யாலே என்ற மெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-பியாக்-தாளம்-ஆதி.

### பல்லவி.

தே-சாபிமானச் சீமான்
ஆ-சார ஜவர்லால் பூமான் (தே)

### சரணம்.

தீனருக்குதவிடும் பாகன்—சுய
தேசியப் பிரசங்க யூகன்—உயர்
ஆனந்த பவனத்தி யாகன்—மதி
அரசர்கள் புகழும்வி வேகன் (தே)

### தொகையரா.

செல்வமாக மீர்கஞ்சிற் ஜெனித்திட்ட கண்யன்
தேசமக்கள் வாழ்ந்திட வுழைத்திடும் புண்யன்

கல்வியாளர் போற்றி நெஞ்சிற் கருதுலா வண்யன்
காதகப் பகைவர்களைக் கடியுமா திண்யன்

### பாட்டு முடுகு.

செந்தமிழ்க் கூடல் விளங்கும் நடராஜன்
பைந்தமிழ்ப் பாடற் குகந்த சுபோஜன் (தே)

## செல்வக்குமரன் ஜவஹர்லால் நேருவுக்கு பாரதத்தாய் ஆசீர்வதித்தல்.

சூழ்ந்துசர்க்கார் சுற்றுவோம்—என்ற மெட்டு.

கண்ணிகள்.

தீரசிங்கம் தேசீய ஜெயப்ரதாபனும்
தாரணியிற் கீர்த்திபெற்ற ஜவர்லால்நேருக்கு ஜே! (தீர)

அற்புதஞ்சேர் ஆனந்த பவனத்தியாகனும்
நற்புகழில் லாதசீலன் ஜவர்லால்நேருக்கு ஜே! ஜே!! (தீர)

பண்டிதராம் மோதிலால் பாக்ய புத்திரனும்
தண்டபாணி யென்னும்வீர ஜவர்லால்நேருக்கு
ஜே! ஜே!! ஜே!!! (தீர

மாசில்லாத கமலாநேர் மகிழ்ச்சிகாதலனும்
தாசனட ராஜன்கூறுஞ் ஜவர்லால்நேருக்கு
ஜே! ஜே!! ஜே!!! ஜே!!!! (தீர)

---

## லண்டன் மகாநாட்டில் மகாத்மாவை எதிர்பார்க்குங் காட்சி

கூவுதுபார் குயில்—என்ற மெட்டு.

இராகம்—தேசிகதோடி—தாளம்—ஆதி.

பல்லவி.

தேடுகின்றார் லண்டனில்
வாடுகின்றார் வெள்ளையர் (தேடு)

அநுபல்லவி.

லாடசந்யாசியாம் ஞானமகாத்மாவை
கூடும் வட்டமேஜை கொண்ட மகாநாட்டில் (தேடு)

பந்தல் சிங்காரித்தார் பாவையைச் சிறப்பித்தார்
சொந்த மாப்பிள்ளையைத் துரிதமாய்க்காணுமல் (தேடு)

கணக்குடனே மூல்டான் கப்பலிலேறிய
மணப்பெண்ணின்தோழரும் மாப்பிள்ளைவாராமல் (தேடு)
சீர்பெறுமிந்தியா க்ஷேமமுடன்வாழ
பேர்பெறும் நடராஜன் ப்ரீயகீதம்பாடித் (தேடு)

## பரோபகாரத் தன்மை.

பாரினிலேபுகழ் பாரத—என்ற மெட்டு.

பல்லவி.

தீரன் ஜவஹர்லால் தேவியின் புத்திரனே—சுய
தேசமித்திரனே (தீர)

அநுபல்லவி.

தாரணியோர்புகழ் சாத்மீகப் போரினிற்
சட்டமுறைப்படி திட்டம்வகுத்திட்ட (தீர)

தொகையரா.

சத்தியவான் கோகலேயும் தென்னாப்ரிக் காவதனிற்
சார்ந்து வாழும்
உத்தமநம் இந்தியர்கள் பரிதாபம் போக்கிடவே
உறுதி கொண்டு
சித்தமுடன் விடுத்தபெரு வேண்டுகோட் கிணங்கியதி
சீக்கி ரத்தில்
இத்தரையில் நாற்பதினு யிரம்ரூபாய் சேகரித்து
ஈந்த பூமான

ஷை பல்லவி யெடுப்பு.

ஒத்துழை யாவியக் கத்திலுழைத்தவனே—நீதி
உண்மைத் தத்துவனே
சித்ரக்கலாநிதி வித்வநடராஜன்
செப்பிடுங் கீதத்தின் நட்புறுஞ் சாமர்த்ய (தீர)

# தீவிரப் பிரசாரம்.

அற்புதச்சிங்காரன் செந்தில்—என்ற மெட்டு.

இராகம்-பியாகு-தாளம்-ஆதி.

பல்லவி.

பக்தர்கள் கொண் டாடுந்தங்கம்
பண்டித ஜவஹரிலால் (பக்)

அநுபல்லவி.

பண்டித ஜவஹரிலால்
எண்டிசை புகழ்ந்திடுமால் (பக்)

சரணம்.

உத்தியோகத்தை விடுத்தார்
உலக நன்மைக் கடுத்தார்
சத்தியாக்ரகந் தொடுத்தார்
சாதகத்தையே கொடுத்தார் (பக்)

தோகையரா.

தந்தையாம் நேருவின் திட்டத்தைத் தள்ளியே
சம்பூர்ண ஆட்சி கொண்டார்

சந்திர போசுடன் கூடியே வுபன்யாசந்
தாஷ்டீக மாக விண்டார்.

சரண எடுப்பு.

பார்புகழ் மதுரை வாசன்
பாலனும் நட ராஜன்
சீர்பெறுங்கீதப்ர காசன்
ஜீவகாருண்யவி லாசன் (பக்)

## தீனதயாளன்

# மகாத்மா காந்தியடிகள்

## மகத்வகீதம்.

பண்டாரம்போல் வருமுருகனை-என்ற மெட்டு.

இராகம்—தேசிகதோடி—தாளம்—ஆதி.

பல்லவி.

கண்ணுன காந்திமகானைக் காணவாருங்கோ—இந்த
மண்ணுளுஞ் சாந்தோபதேசம் பூணவாருங்கோ-சொந்தக் (க)

அநுபல்லவி.

எண்ணில் வேத நிதியே—கடல்சூழ்
மண்ணில் நீத பதியே—தேசியக் (கண்)

சரணம்.

தெய்வீகத் தன்மையினுலே
ஜெகமதிலவதரித் துற்றவராம்
மெய்யான தேசிய ராஜிய
விதிகளை யெளிதினிற் கற்றவராம்
சித்தத்துகளை யற்றிப் புவிதனில்
மெத்தப்புகழே பெற்றுக்
கருணையே ஜெனிக்குதாம்
திருப்ரசங்க மினிக்குதாம்
சிவப்ரகாசஞ் ஜொலிக்குதாம்
தவப்ரசாதம் பலிக்குதாம்
திடமுறுமனதைக் கொடுக்குதாம்
சடமதின்வினையை முடுக்குதாம்
திருமதுராபுரி வளர்நடராஜன்
சேவைக் குகந்த தேசிய
தேவைக் குகந்த பூஜித (கண்)

## ஆனந்த பவனத்யாகன்

# பண்டித மோதிலால் நேரு

## பரத்வகீதம்.

சிறைவாயில் தன்னில் அழுதாள்-என்ற மெட்டு.

இராகம்-இந்துஸ்தான் பியாகு-தாளம்-ஆதி.

பல்லவி.

பரலோக வாழ்வை யடைந்தார்
பண்டிதநேரு (பா)

அநுபல்லவி-

பரிதாப மேவிட பாரததேவியும்
அரிதாமா னந்தபவ னத்தி யாக மூர்த்தியார் (பா)

தொகையரா.

ஆயிரத்தி யெண்ணூற்றி யறுபத்தோ ராண்டினிலே
யவதரித்தார்
ஆறிரண்டு பிராயமதில் தேர்ச்சிபெறப் பலகலையும்
அரிதிற் கற்றார்
தூயநெறி தவறுச்சு யேச்சையெனுஞ் சஞ்சிகையைத்
தொடுத்து வந்தார்
துன்மார்க்கன் டயர்செய்த பாஞ்சாலப் படுகொலையில்
துயர முற்றார்
நேயமுடன் ஏழைகளை ரட்சிக்கப் பொருளுதவி
நிறையச் செய்தார்
நிட்டூரப் படுகொலையைக் கண்டித்துக் காங்கிரஸில்
நியாயந் தந்தார்
தீயமுறை சார்ந்தழியும் ஆள்தூக்கிச் சட்டமதைத்
தியங்க வைத்தார்
தேசாபி மானமுற்று தீவிரமா யெந்நாளுஞ்
சேவை செய்தார்

ஷை அநுபல்லவி யெடுப்பு.

பதிவ்ரதா ஸ்ரோண்மணி பாக்யசொரூபராணி
மதிமோகஞனக்யானி மாய வாழ்வை நீங்கியே (பா)

தோகையரா.

இந்தியருக் கேற்றவொரு சீர்திருத்தஞ் செய்வதிலே
யேக்க முற்றார்
இரக்கமின்றி அயல்நாட்டார் செயுங்கொடுமை சகியாது
இதயம் நொந்தார்
தந்தையென வருங்காந்தி சாத்மீகப் போரதனிற்
சார்ந் துழைத்தார்
சனியான அடக்குமுறைச் சட்டமதாற் சிறைபுகுந்து
சந்தோ ஷித்தார்
அந்தியகா லத்தையெதிர் பாராது சேவைசெய
ஆசை கொண்டார்
அடிமைகொண்டு வாழ்வதினும் உயிர்விடுதல் மேலெனவே
அறிவிற் றேர்ந்தார்
வந்தவர்கள் ஆட்சியிலே யிருந்தவர்கள் படும்பாட்டின்
வருத்தத் தாலே
மாட்சிமைசேர் லட்சுமண புரியதனிற் புகழோங்க
மாண்டா ரந்தோ

பாட்டு.

மாமதுராபுரி வளர்நடராஜன்சொல்
க்ஷேமசங்கீதவாக்ய சீல ஞன மோதிலால் (பா)

மக்கள் கடமை

# வேண்டும்பத்து.

விருத்தம்.

பேருலகில் மானிடராய்ப் பிறத்தல் வேண்டும்
பெருமைதர வாழ்ந்துநலம் பெருக்கல்வேண்டும்
காரெனவே பிறர்க்குதவி கருத்தில் வேண்டும்
காங்கிரஸில் தொண்டரெனக் கணித்தல் வேண்டும்
ஈரமுடன் தேசத்தொண் டியற்றல் வேண்டும்
எல்லோரும் ஒன்றெனவே யெண்ணல்வேண்டும்
சீரியர்சொல் வேதமெனத் தேர்தல் வேண்டும்
திருகுமன மில்லாமற் சிறக்க வேண்டும்
வீரனெனப் போர் முனையில் மிளிரல் வேண்டும்
வெற்றிதரும் அஹிம்ஸைதனை விரும்புவோமே.

காலக்கொடுமையால்—என்ற மெட்டு.

கண்ணிகள்.

எங்கும் விளங்கும்ப்ர
சிங்கஞ்ஜவஹர்லால்
பொங்குஞ்சுதேசியங்
லங்கவுழைத்திடு
பெண்டுபிள்ளையுடன்
சென்றசன் மார்க்கவை
கொண்டபெரும்பொருள்
நன்றுதுறந்ததி
நாளுக்கு நாளொரு
ஏழைக்குப் போராடும்
மேலுக்கு மேலாக
காலற்குப்பின்னிடாத்
மூர்த்தி வளர்ந்திடுஞ்
க்ஷேத்திர முற்றவோர்
கீர்த்தி நடராஜன்
பாத்திரப்ரஜானு

சங்கமுழங்கிடுஞ்
நேரே
தங்குஞ்சுயாட்சியி
வாரே (எங்)
தொண்டுசெய்தே சிறை
போகன்
அண்டர்புகழ்மனை
யாகன் (எங்)
வேளைக்கஞ்சியற்ற
வீரன்
ஜாலத்தொழிற் செயுந்
தீரன் (எங்)
சீர்த்தி பெறுந்தமிழ்
சீலன்
தோத்திரக் கீர்த்தனைப்
கூலன் (எங்)

வந்துவிட்டது! உ வந்துவிட்டது!!

# புதிய தேசீய கீதங்கள்.

முத்தமிழ் க்ஷேத்ரம் மதுரகவி V. நடராஜபிள்ளை அவர்கள் பாடிய வேதாரண்யம் உப்புச்சத்யாக்கிரக கீதமெனும் காங்கிரஸ் பாட்டு விலை அணா 0—2—0

ஷெயார் இயற்றிய தேசீய கீதம் பகதூர் பகவத் சிங் பாட்டு ... விலை அணா 0—2—0

சுயராஜ்ய பவனச் சீமான் பண்டித ஜவர்லால் கீதம் என்னும் சுயராஜ்யத் திலகம் ... விலை அணா 0—2—0

S S. விஸ்வநாததாஸ் பாடிவரும் புதிய தேசீய பாட்டு ... விலை 0—2—0

கவிக்குஞ்சரம் அவர்கள்பாடிய நாட்டுத் திலகம் என்னும் ராட்டுப்பாட்டு விலை அணா 0—2—0

S V. சுப்பையா பாகவதர் அவர்கள் பாடிய பூங்[illegible]நேரத சிங்காரப்பாட்டு 1, 2 0—2—0

சங்கீ[illegible]த்வான் அனந்தராம் பாகவதர் அவர்களால் ஸ்வரங்கள் அமைக்கப் பெற்ற தியாகராஜ சங்கீத ஸ்வரஹாகித்யம் விலை ரூ 1—8—0

மேற்கண்ட புத்தகங்களும் மாணவர்களுக்கு வேண்டிய ஸ்கூல் புத்தகங்களும் இன்னும் இதர புராண இதிகாச புத்தகங்களும் எங்களிடம் மொத்தமாகவும் சில்லரையாகவும் நேரிலும் V. P. மூலமாகவும் பெற்றுக் கொள்ளலாம். எமது விலாசம்,

**M. பழனியாண்டி அன் கோ,**

புத்தக வியாபாரம், புதுமண்டபம்,

மதுரை.

ராஜா பிரஸ், மதுரை:—31.